செ.வெ.எண்.55 நாள்: 20.08.2017

**மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் திரு.ப.தனபால் அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் உள்ள சுதந்திர போராட்ட வீரர் ஒண்டிவீரன் மணிமண்டபத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் மேலும் நெற்கட்டும் செவல் பச்சேரி கிராமத்தில் ஒண்டிவீரன் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள்.**

--------

விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு இன்று (20.08.2017) திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் உள்ள ஒண்டிவீரன் மணிமண்டபத்தில் அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு.ப.தனபால் அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தமிழக அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். மேலும் சங்கரன்கோவில் வட்டம் நெற்கட்டும் செவல் பச்சேரி கிராமத்தில் உள்ள ஒண்டிவீரன் நினைவிடத்தில் தமிழக அரசின் சார்பில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர் தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.-

மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா அவர்கள் விடுதலைப்போராட்ட வீரர் ஒண்டிவீரன் நினைவு நாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில் மரியாதை செலுத்துவதற்க்கு என்னை வருடம் தோறும் அனுப்பி வைப்பார்கள் அதனடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த வருடமும் தமிழக அரசின் சார்பில் மரியாதை செலுத்துவதற்கு என்னை அனுப்பி வைத்துள்ளார்கள். மேலும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சுதந்திர போராட்ட வீரர் ஒண்டிவீரன் மணிமண்டபத்தில் பூங்கா மற்றும் நூலகம் அமைத்திட திட்ட மதிப்பீடு தயார் செய்து கொடுத்துள்ளார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சரிடம் கொண்டு சென்று உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும். என தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன், திருமதி.விஜிலா சத்தியானந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர்.முருகையா பாண்டியன், திரு.செல்வ மேகான்தாஸ் பாண்டியன், தென்னக இரயில்வே ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.பாப்புலர் வி.முத்தையா, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., மாவட்ட காவல் உதவி ஆணையர்கள் திரு.பெரோஷ்கான்,இ.கா.ப., திரு.சுகுனாசிங்,இ.கா.ப., கோட்டாட்சியர்கள் (திருநெல்வேலி) திருமதி.மைதிலி, (தென்காசி) திரு.ராஜேந்திரன், ஆவின் தலைவர் திரு.ரமேஷ், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய துணைத்தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜூ, நுகர்வோர் கூட்டுறவு பேரங்காடி தலைவர் திரு.பல்லிகோட்டை செல்லத்துரை, அக்ரோ தலைவர் திரு.மகபூப்ஜான், நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.ஆறுமுகம், முக்கிய பிரமுகர்கள் திரு.சுதா.கே.பரமசிவம், திரு.பரணி சங்கரலிங்கம், திரு.கே.ஜே.சி.ஜெரால்டு, திரு.சேர்மபாண்டி, திரு.ரெட்டியார்பட்டி நாராயணன், திரு.கபரீயேல் ராஜன், திரு.பெரிய பெருமாள், திரு.நவ்சத், ஆகியோர் உள்ளனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.